செ.வெ.எண். 59/அக்டோபர் தேதி : 26.10.2016

**தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் பேரிடர் மேலாண்மை - செய்தியாளர்கள் பயணம் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**




தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் பேரிடர் மேலாண்மை பணிகள் தொடர்பான மற்றும் செய்தியாளர்கள் பயணம் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மைக்கென 5 அடுக்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அளவில், பிர்க்கா அளவில், வட்ட அளவில், வட்டாட்சியர் அளவில் மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழுக்களானது வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மக்களுக்கு எவ்வித பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் பல துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 251 ஊராட்சிகளிலும் பேரிடர் மேலாண்மை குழு, கிராம நிர்வாக அலுவலர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கிராம நிர்வாக அலுவலர், கிராம சுகாதார செவிலியர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், பொதுமக்கள் உறுப்பினர்களாக பேரிடர் மேலாண்மை குழுவினர் அந்தந்த பகுதிகளில் உள்ள நீர் நிலைகள், ஓடைகள், ஆறுகள் ஆகியவை மழைக்காலக்காலற்களில் தடையில்லாமல் நீர் செல்வதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

பள்ளி தலைமையாசிரியர்கள் மாணவர்களிடையே பேரிடர் மேலாண்மை குறித்து விளக்கமளிக்க வேண்டும். குறிப்பாக வெள்ளம், நிலநடுக்கம், நிலச்சரிவு ஏற்படும் காலங்களில் எந்த மாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதை பற்றி விரிவாக எடுத்துரைக்க வேண்டும்.

அவசர காலத்திற்காக நீர்புகாத பையில் எடுத்து செல்ல வெதுவெதுப்பான ஆடைகள், அடிப்படை மருந்துகள், விலையுயர்ந்த பொருட்கள், படுக்கைகள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்கவும், நீங்கள் வெளியேற நேர்ந்தால் சென்றடையும் முகவரியை, உள்ளூர் அதிகாரிகளுக்குத் தெரிவியுங்கள். மரச்சாமான்கள், துணிமணிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை, அலமாரிகள் போன்ற உயரமான இடங்களில் வைக்கவும். மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பினைத் துண்டிக்கவும். வெளியேறினாலும், வீட்டில் தங்கியிருந்தாலும் கழிப்பிட துளை மீதும், குளியலறை/துணி துவைக்கும் அறையின் கழிவு நீர் வெளியேறும் துளை மீதும் மணல் மூட்டைகளை வையுங்கள். இதன் மூலம் கழிவு நீர் மீண்டும் உள்புதலைத் தடுக்க இயலும்.

வெள்ளத்தின் போது கொதிக்க வைத்த நீரை அருந்துகள். பால் கலக்காத தேநீர், அரிசி கஞ்சி, இளநீர் போன்றவற்றை அருந்துங்கள். உணவை மூடி வைத்திருக்கவும், வயிற்றுபோக்கு இருந்தால் அதிக உணவை உட்கொள்ளாதீர்கள். அங்கன்வாடி ஊழியர்களைத் தொடர்பு கொண்டு, சர்க்கரை உப்புக் கரைசலை உட்கொள்ளுங்கள். உள்ளூர் அதிகாரிகளுக்கும் / தன்னார்வலர்களுக்கும் எல்லா வகையிலும் உதவுங்கள். பொதுமக்கள் இம்முறைகளை பின்பற்றி மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களிலிருந்து தங்களை தற்காத்துக்கொள்ள வேண்டுமெனவும், மேலும் 24 மணி நேரமும் இலவச மருத்துவ தகவல் மற்றும் ஆலோசனை பெற 104 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

மழைக்காலங்களில் மரங்கள் சாலைகளில் விழ நேரிடும் போது அவற்றை அகற்ற JCB இயந்திரங்கள், லாரி, டிப்பர், இயந்திர மர அறுப்பான் மற்றும் இதர கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சாலைப்பகுதிகள் சேதமடைந்தால் உடன் சீரமைக்க மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அரசு சாலைகளில் உள்ள பெரிய பாலங்கள், சிறிய பாலங்கள் மற்றும் மிகவும் சிறு பாலங்கள் ஆகியவற்றின் நீர்வழிப்பாதைகள் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் சுத்தம் செய்யப்பட்டு நீர் வரத்து தடங்கல் இல்லாமல் செல்லும் வகையில் வைக்கப்பட்டுள்ளது. சாலை ஆய்வாளர்கள் மற்றும் சாலைப்பணியாளர்கள் அனைவரும் வெள்ள சேதார பணிகளை உடன் சீர் செய்ய தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவசர காலங்களில் வெள்ள சேதாரங்களை சீர் செய்ய ஒப்பந்ததாரர் விவரங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. தருமபுரி நெடுஞ்சாலை க(ம)ப கோட்டத்திற்குட்பட்ட, கோட்ட அலுவலகம், உட்கோட்ட அலுவலகங்களில் வெள்ளக்கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள், சாலை ஆய்வாளர்கள் மற்றும் சாலைப்பணியாளர்களின் தொலைபேசி எண்கள் விவரங்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை துறையின் மூலம் 1434.931 கி.மீ நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 1331.611 கி.மீ நீளமுள்ள சாலைகள் போக்குவரத்திற்கேற்ற நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 103.22 கி.மீ நீளமுள்ள சாலைகளில் உள்ள நொடிகள் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்ட களப்பணியாளர்கள் அவரவர் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு பேரிடர் மேலாண்மை குறித்து எடுத்துரைத்து வருகிறார்கள். மின்சார துறையினர் அவரவர் பகுதிகள் மழைக்காலங்களில் மின்கம்பிகள் அறுந்து விழாத வண்ணமும் தாழ்வாக செல்லாத வண்ணமும் பார்த்து கொள்ள வேண்டும். மேலும் மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மை மையம் சார்பில் செயலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலியினை பொதுமக்கள் தங்களது கைபேசியில் பதவிறக்கம் செய்துகொள்ள www.dharmapuri.nic.in, வளைதளத்தில் சென்று பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். இந்த செயலியில் பேரிடர் மேலாண்மை காலத்தில் தொடர்புகொள்ள வேண்டிய எண்களான 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்களுக்கும் மற்றும் மாவட்ட நிர்வாகத்தில் அனைத்து அலுவலர்களுடைய தொலைபேசி எண்கள், கைபேசி எண்கள் ஆகியவை செயலியில் உள்ளன. பொதுமக்கள் அவசர காலத்தில் இந்த செயலியை பயன்படுத்தி தங்களது பகுதிகளில் உள்ள குறைகளை அவரச கால உதவி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு. ராஜேந்திரன், பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் திருமதி. விஜயா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.